30th September 1958] [Srimathi Lourdhammal Simon]

சந்தேகம்தான் ஏற்படும். இவ்விதமாக இதை நீட்டிக்கொண்டு போவதைவிட, உடனடியாக அமுலுக்குக் கொண்டுவருவது நல்லது என்ற கருத்துடன் இதைத் தீவிர பரிசீலனை செய்து இந்தச் சபை முன் கொண்டு வந்திருக்கிறோம்.

கனம் எதிர்க்கட்சித் தலைவர் ஸ்ரீ வி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் இதில் முழுப் பங்கு எடுத்துக்கொண்டு, முழு ஆர்வம் காட்டி, இந்த மசோதாவிலுள்ள எல்லா ஷரத்துக்களையும் பரிசீலனை செய்வதில் தகுந்த அக்கறையுடன் அவற்றை ஏற்றுக்கொண்டு நடத்தினார். அந்தப் பொறுப்பை அவர் ஏற்றதினால் இந்த மசோதாவிலுள்ள எல்லா ஷரத்துக்களைப்பற்றியும், அவைகளின் நோக்கங்களைப்பற்றியும், அரசாங்கத்தின் எண்ணத்தைப்பற்றியும் அவர் தெளிவாகத்தான் கூறினார்கள். அரசாங்கம் எந்த மசோதாவைக் கொண்டுவந்தாலும் அதை எதிர்க்கவேண்டுமென்ற ஒரு மனப்பான்மையைத்தவிர வேறு ஒன்றும் இல்லாமல் எதிர்க்கும் சில அங்கத்தினர்களைப்போல் அல்லாமல், அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தும், இவ்விதமான நல்ல மாறுதல்களை ஏற்று இவ்விதமான நல்ல திட்டங்களை ஆதரித்ததற்கு நாம் எல்லோரும் மகிழ்ச்சி அடையவேண்டும். இன்னும் அவர்கள் இந்த மசோதாவின் அமைப்பையும், அது எவ்வாறு நடக்கவேண்டும் என்பதையும் விரிவாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறினார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வெள்ளை அறிக்கையை ஒரு வருஷ காலமாகப் பரிசீலனை செய்து, மசோதாவை இங்கு கொண்டுவந்த சமயத்திலும் அனேக திருத்தங்களையும் கொண்டுவந்து, அந்தத் திருத்தங்களைச் சரிவர பரிசீலனை செய்து, தகுந்த முறையில் அமைக்க, ஆலோசனை கூறின எல்லா கனம் அங்கத்தினர்களுக்கும், விசேஷமாகச ர்க்கார்க் கட்சித் தலைவர் கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ஸ்ரீ வி. கே. ராமசாமி முதலியார் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. அண்ணாதுரை அவர்களுக்கும், கனம் அங்கத்தினர்கள் திருவாளர்கள். கோவிந்தசாமி, செல்வராஜன், அண்ணாமலை, ஸ்ரீனிவாச அய்யர், லாஸர், சங்கரன், சம்பத் முதலியவர்களுக்கும் எனது விசேஷ நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இன்னும் எல்லோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மசோதாவை எல்லோரும் ஆதரித்து சரியான முறையில் நடப்பதற்குத் தங்களுடைய முயற்சியால் நல் ஆதரவு கொடுத்தால் இதில் நாம் வெற்றி காண்போம் என்ற உறுதியுடன் இந்தச் சபையில் இதை ஆதரித்துச் சட்டமாக்கும்படியாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Panchayats Bill, 1958 (L.A. Bill No. 33 12-40 p.m.
of 1958), as amended, be passed."

The motion was put and carried and the Bill, as amended, was passed.

(2) THE MADRAS PUBLIC HEALTH (AMENDMENT) BILL, 1958
(L.C. BILL NO. 6 OF 1958)

*THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

"That the Madras Public Health (Amendment) Bill, 1958 (L.C. Bill No. 6 of 1958) as passed by the Legislative Council be taken into consideration."

Section 92 of the Madras Public Health Act, 1939 (Madras Act III of 1939) prohibits the construction or establishment of any new factory, workshop or work-place or the carrying on of any new

* Printed as Appendix IX on page 1140 infra.

offensive trade in the areas reserved for 'residential purposes' under section 89 of the said Act. In view of this provision, the construction or establishment of any new factory, workshop or work-place in 'notified residential areas' for the purpose of carrying on a cottage industry is not permissible. Consequently installation of any machinery of even a small horse power ranging from 1/2 to 3 for such cottage industries in the notified residential areas is also not permissible. To enable the growth of cottage industries, it is necessary to amend the said provision suitably so as to permit the construction or establishment of any new factory, workshop or work-place in notified residential areas for the purpose of carrying on a cottage industry. This will enable the grant of permission also for installation of machinery of small horse power for cottage industries. I therefore commend the motion for the acceptance of the House.

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Public Health (Amendment) Bill, 1958 (L.C. Bill No. 6 of 1958) as passed by the Legislature Council, be taken into consideration."

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I am not so much in favour of the introduction of this Bill. Because, it has not been clearly defined as to what is meant by a cottage industry. Further, even if a cottage industry is started in those built-up areas, the nuisance will always be there. I am sure the residents of the locality will be put to lot of inconvenience and nuisance and the Government cannot deny that fact. When we look at the provisions of the Bill, we have to come to the conclusion that the authorities of the Public Health department may not enforce the provisions as rigidly as they should. That is my first submission. Even so far as the existing provisions of the Act are concerned, we find that the rules are infringed in a number of places and even with regard to the foodstuffs the rules are not properly and efficiently enforced. So, I doubt very much whether the departmental people will be able to effectively enforce the provisions of the proposed Bill. Further we all know that most of the people—I do not say everybody—do not have civic conciousness. Whatever it is, whenever we introduce measures like the one that we are just now considering, the provisions are more honoured in their breach than in their observance. That is the position. My contention is that the Government should concentrate more on the preventive side than on the curative side of the diseases.

Sir, it was stated that motors will be erected in certain places and wherever there is no electricity, they may even put up oil engines. If oil engines and even if electric motors were installed, I am sure still the noise will be there. There are so many other types of nuisance to the residents. That is my second submission.

My third submission is this. The Government should proceed rather cautiously in giving effect to measures like this, especially with reference to the extension of the provisions of this Bill to the various areas. Even if this Bill is passed, the Government should

30th September 1958] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

be very careful in enforcing the provisions. I am sure the Government will define what a cottage industry is. Once this Bill is passed, there may be so many applications coming forth from the private sector and they should not be influenced by all sorts of pressure.

So, in the first instance, the Government should clearly define what a 'cottage industry' is. After defining it, when they give permission for the installation of the machinery, they should be very cautious to see that no untoward nuisance or harassment is caused to the residents in that particular locality by their giving such permission. That is all my submission.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சென்னை பப்ளிக் ஹெல்த் திருத்த மசோதாவில் 92-வது ஷரத்தில் குடிசைத் தொழில் அபிவிருத்தி செய்வதற்கு அவ்வப்போது அரசாங்கம் குடிசைத்தொழில் இன்னவை என்று சிலவற்றை விளம்பரப்படுத்துவதற்கு அனுமதிக்கலாம் என்கிற பவரைக் கோரி வந்திருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்கதுதான். செக்ஷன் 89-ஐ வைத்துக்கொண்டு பப்ளிக் ஆக்ட்படி வேறிடங்களில் வகை செய்யப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு இடத்தை தொழில் நடத்துவதற்கு ஏற்ற இடம், குடியிருப்புக்கு மாத்திரம்தான் தகுதி உடைய இடம் என்பதாக இரண்டு பிரதேசங்களாகப் பிரித்து, குடியிருப்புப் பிரதேசங்களில் தொழில் நடத்துவதற்கு லைசென்சு மறுக்கப்படலாம் என்பதற்கு ஏற்கனவே சட்டத்தில் வகை இருக்கிறது. ஆனால் நகராண்மைக் கழகங்களை எடுத்துக்கொண்டால் பலவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. இன்னும் இவை தொழில் நடத்துவதற்கு ஏற்ற இடம், இந்த இடத்தில் குடியிருக்கலாம், தொழில் நடத்தக் கூடாது என்பதாக சரியாகப் பிரிக்கப்படவில்லை. ஒரு வீதியில் ஒரு பகுதி குடியிருப்புக்கு லாயக்குள்ளதாகவும், மற்றொரு பகுதி தொழில் நடத்துவதற்குத்தான் லாயக்கு என்றும், இன்னும் சொல்லப்போனால் ஒரு வீட்டிலேயே ஒரு பகுதி குடியிருப்புக்கு லாயக்கு என்றும், இன்னொரு பகுதி தொழில் நடத்துவதற்கு லாயக்கு என்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி நகராண்மைக் கழகங்கள் நல்லமுறையில் ஆராய்ச்சி நடத்தி, அவர்களது ஆலோசனைகளை எல்லாம் அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் ஆலோசனை சொல்லி இரண்டு ஆண்டுகள் ஆகியும் கூட இன்னும் முடிவு காணப்படவில்லை. இந்த நிலையில் குடியிருப்புப் பகுதியில் எந்தத் தொழில் நடத்துவதற்கும் சட்டம் இடம் கொடுக்காது. இந்தச் சட்டத்தின்படி அழுக்குத் துணிகளைச் சேகரிக்கும் லாண்டரி (சலவை சாலை) குடிசைத்தொழில் என்ற முறையில் மக்கள் குடியிருக்கும் பகுதியில் வைக்கக் கூடாது என்று வந்துவிடும். இம்மாதிரியாகச் செய்யக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. சில மாவு அரைக்கும் மில்கள், அச்சகங்கள் இவைகள் எல்லாம் ஹார்ஸ் பவர் வைத்து நடத்தப்படுவதால் அவற்றையும் குடியிருப்புப் பகுதியில் வைக்கக் கூடாதென்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இவையெல்லாம் மக்களுக்கு அன்றாட அத்தியாவசியமான காரியங்களுக்கு உபயோகப்படுவதால் மக்கள் வசிக்கக்கூடிய இடங்களிலேயே இருப்பதுதான் நல்லது. அதோடு பலவிதமான கஷ்டங்களுக்கும் காரணம் அரசாங்கம் நகராண்மைக் கழகம் அனுப்பியுள்ள ஆலோசனைகளின் பேரில் இன்னும் திட்டவட்டமாக முடிவு எடுத்துக்கொள்ளாததுதான். சீக்கிரமாக அதன் பேரில் ஒரு முடிவும் எடுக்கவேண்டும். கடலைமாவு, அரிசிமாவு போன்றவைகள் அன்றாடம் தேவைப்படுபவை. எனவே அவைகள் அடிக்கடி அரைக்கப்பட வேண்டியிருக்கும். அரிசி மில்களும் மாவு மில்களும் குடியிருப்புப் பிரதேசத்திற்கு அருகே இருந்தால்தான் அங்கே சென்று அவைகளை உடனடியாக அரைத்துவர முடியும். அவை குடியிருப்புப் பிரதேசமல்லாத பகுதிகளில் இருந்தால் மாவு அரைத்துவர நேரமாகும்.

12-50 p.m.

அந்தக் கஷ்டம் பெண்களுக்குத்தான் தெரியும். மாவு மில் வெகு தூரத்தில் இருந்தால் அங்கே அனுப்புவதற்கு ஆளைத்தேடுவது கஷ்டம். ஆள் கிடைத்தாலும் அந்த ஆள் வெகு தூரம் போவது கஷ்டம். அவன் வெகு தூரம் போனாலும் திரும்பிவர நேரமாகும். இந்த நேரத்தில் சமையலாவது தாமதப்படும். சமையலாவது தாமதமானால் ஆண்களுக்குக் கஷ்டம் ஏற்படும். அன்றாடத் தேவையில் பத்திரிகைகள்கூட வருகின்றன. லாண்டிரி, ஸலூன் போன்ற இடங்களுக்கும் மக்கள் அடிக்கடி போய்வர வேண்டியிருக்கிறது. குடிசைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை மட்டும் காப்பாற்றாமல் இந்தத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களையும் காப்பாற்ற வேண்டும். லாண்டிரி, ஸலூன், அரிசி-மாவு மில்கள் முதலியவை வெகு தூரத்திலுள்ள குடியிருப்பிற்கல்லாத பிரதேசங்களில் இருந்தால் அந்த இடங்களுக்கு அடிக்கடி செல்லும் மக்கள் அரசாங்கத்தை சபித்துக் கொண்டே போவார்கள். இவைகள் " ஒர்க்ஷாப் " கள் தானே என்று கருதக்கூடாது. அவ்வாறு கருதி இவைகளை வெகு தூரத்திலுள்ள குடியிருப்பிற்கல்லாத பகுதிகளுக்குக் கொண்டுபோகக்கூடாது. இது சம்பந்தமாக கார்ப்பரேஷன் அரசாங்கத்திற்கு ஒரு அறிக்கை அனுப்பியிருக்கிறது. அந்த அறிக்கையில் லாண்டிரிகள், ஸலூன்கள் முதலியவைகள் குடியிருப்புப் பிரதேசங்களில் இருக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அரசாங்கம் அவ்வப்போது எவ்வாறு தீர்மானிக்கிறதோ அவ்வாறுதான் விதி விலக்கு அளிக்கப்படும் என்று சொன்னால், மக்களுக்கு அன்றாடம் உபயோகப்படக்கூடிய தொழிற்சாலைகள் தூரத்தில் அமைந்துவிடும். 89-வது ஷரத்தின்கீழ் ஒரே பிரதேசத்தில் ஒரு பகுதியை குடியிருப்புப் பகுதியாகவும் மற்றொரு பகுதியை குடியிருப்புக்கல்லாத பகுதியாகவும் பிரித்தால் இத்தகைய தொழில்களுக்குக் கஷ்டம் ஏற்படும். அதேமாதிரி மளிகைக் கடைகளும் குடியிருப்புப் பகுதிக்கு அருகாமையில் இருக்க வேண்டும். ஏனென்றால், மளிகைச் சாமான்கள் அன்றாடத் தேவைகள். வீட்டிலிருந்து 1½ மைலுக்கு அப்பால் மளிகைக் கடை இருந்தால் மக்கள் கஷ்டப்படுவார்கள் ; அவசர காலத்தில் ஏதாவதொரு மளிகைச் சாமான் வாங்கவேண்டியிருந்தால் மக்கள் வெகு தூரம் போக வேண்டியிருக்கும். இந்த ஷரத்திலிருந்து எந்த எந்தத் தொழிற்சாலைகளுக்கும் கட்டிடங்களுக்கும் விலக்குத் தரப்பட வேண்டுமென்று கார்ப்பரேஷன் சர்க்காருக்கு ஒரு அறிக்கை அனுப்பியிருக்கும்போது அந்தத் தொழில்கள் எல்லாவற்றிற்கும் விலக்களிக்காமல் குடிசைத் தொழில்களுக்கு மாத்திரம் விலக்களிப்பது சரியல்ல. 92-வது ஷரத்தின்கீழ் அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய தொழிற்சாலைகளுக்கு விலக்கு அளிக்கப்படவேண்டும். " அரிசி-மாவு மில்கள் போன்ற தொழிற்சாலைகள் வீட்டிற்குப் பக்கத்தில் இருந்தால் எங்களுக்கு எப்போதும் ஓசைத் தொந்தரவு இருக்குமே. சத்தத்தோடு குடியிருப்பதற்கா வீட்டை வாங்கி அதில் வசிக்கிறோம் " என்று வீட்டுச் சொந்தக்காரர்கள் கேட்பார்களே என்று கனம் அமைச்சர் சொல்லக்கூடும். மில்களுக்குப் பக்கத்தில் இருக்கும் வீட்டுக்காரர்களுக்கு சத்தத் தொந்தரவு இல்லாமல் இருப்பதற்கு கார்ப்பரேஷன் நடவடிக்கை எடுத்துவருகிறது. மெஷின்களிலிருந்து வரும் சத்தம் பக்கத்து வீட்டுக்காரர்களை பாதிக்காதபடி மில்களில் glass panels போட்டு சத்தத்தைத் தடுத்திருந்தால்தான் மில்களுக்கு கார்ப்பொரேஷன் லைஸென்ஸ் கொடுக்கிறது. மில்களில் glass panels போடப்பட்டிருக்கின்றனவா என்றும், அவை நல்ல நிலையில் இருக்கின்றனவா என்றும் கார்ப்பரேஷன் அவ்வப்போது சோதனை நடத்துகிறது. அப்படி இருக்கும்போது, trade jealosyயின் காரணமாகவோ விரோதத்தின் காரணமாகவோதான், குடியிருப்புப் பிரதேசங்களிலுள்ள மாவு மில்களால் தொந்தரவு இருக்கிறதென்ற புகார் வரும். மாவு மில்லின் உபயோகம் தேவைப்படும்போதுதான் ஒருவருக்கு அது வெகு தூரத்தில் இருப்பதிலுள்ள கஷ்டம் தெரியும். எந்த எந்தத் தொழில்களுக்கு 92-வது ஷரத்திலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று நான் கொடுத்திருக்கும் திருத்தத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். அதில் நான் குறிப்பிட்டிருக்கும் தொழில்கள் மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தொழில்கள். என் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். கார்ப்பரேஷன்

30th September 1958] [Srimathi T. N. Anandanayaki]

அறிக்கையில் கண்டிருக்கும் அத்தனை தொழில்களுக்கும் இந்த ஷரத்திலிருந்து விலக்களித்தால் அது வரவேற்கத்தக்கது என்று சொல்லிக் கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI K. ANBAZHAGAN : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சென்னை பொது சுகாதாரச் சட்டத் திருத்த மசோதாவை நான் வரவேற்கிறேன். பொதுவாகவே, சுகாதாரச் சட்டத் திருத்த மசோதாவானது எல்லாஷரத்துக்களிலும் அவசியமான திருத்தங்கள் கொண்டதாகத் தயாரிக்கப்பட்டு சுகாதார (திருத்த) சட்டத்தில் உள்ள எல்லா ஷரத்துக்களும் ஒருமித்துத் திருத்தப்பட்டு சுகாதார (திருத்த) சட்டம் கொண்டுவரப்பட வேண்டியது நியதியாக இருந்தாலும், மிக மிக இன்றியமையாத அவசியம் ஏற்படும்போது இப்படிப்பட்ட திருத்த மசோதாக்களைக் கொண்டுவருவதன் மூலம் பொதுமக்களின் நலனைப் பாதுகாப்பது மிக மிக அவசியம். அந்த முறையில் இந்த மசோதா வரவேற்கத்தக்கது.

சென்னை நகரைப் பொறுத்தவரையில், குடியிருப்புப்பகுதி, குடியிருப்பிற்கு மட்டுமல்லாத பகுதி, தொழிற்சாலைகளுக்கேற்ற பகுதி, என்ற பாகுபாடு ஓரளவு செய்யப்பட்டிருந்தாலும், இந்த விஷயத்தில் கொள்கைத் தெளிவு இல்லாததால் ஓரளவு குழப்பம் ஏற்படுகிறது. இப்போது எதைக் குடியிருப்புப் பகுதியாகவும் எதை பிறவகைப் பகுதியாகவும் பிரிக்கிறார்கள் என்று பார்ப்போம். ஏற்கெனவே சில இடங்களில் சில தொழிற்சாலைகள் இருந்தால் அந்த இடங்களை குடியிருப்பிற்கல்லாத பிறவகைக் காரியங்களுக்கும் பயன்படத்தக்க பகுதி என்றும், தொழிற்சாலைகள் கனிசமான அளவில் இல்லாத இடங்களை குடியிருப்பிற்குமட்டுமுரிய பகுதி என்றும் பிரித்து விடுகிறார்கள். இவ்வாறு பிரிப்பதால், ஆங்காங்குள்ள மக்கள் சிறு தொழிற்களைக்கூட நடத்த முடிவதில்லை. குடிசைத் தொழில்களுக்குச் சென்னை எவ்வளவு தூரம் பயன்படும் என்று பார்க்க வேண்டும். குடிசைத் தொழில்கள் சென்னையில் எவ்வளவு தூரம் வளரும் என்று பார்க்க வேண்டும். குடிசைத் தொழில்கள் கிராமங்களிலும் சென்னை நீங்கலாக மற்ற நகரப் பகுதிகளிலும் பெருவாரியாகத் தோன்றி வளரும். சென்னை நகரில், குடிசைத் தொழில்கள் ஓரளவு நடந்தாலும் அவை எப்போதும் குடிசைத் தொழில்களாகவே நடக்காது. அவை ஒரு சில ஆண்டுகளுக்குப் பிறகு நவீன விஞ்ஞான சாதனங்களின் துணையுடன் நடக்கத் தொடங்கும். இயந்திரம் வைத்து சிறு தொழில் நடத்துபவர்கள் அத்துடன் மின் இயக்கத்தைத் தொடர்பு படுத்தி இயந்திரத்தை இயக்கத் தொடங்குவார்கள். அவர்கள் தொழிலை அவ்வாறு நடத்தும்போது, அந்தத் தொழில் "பாக்டரி" என்ற இலக்கணத்துள் அடங்கும். 'பாக்டரி" என்ற இலக்கணத்திற்குள் அத்தொழில் வந்து விட்டால், அது முதலில் பெற்றிருந்த உரிமையை இழக்கும். அந்த நிலையில் அந்தத் தொழிலை நம்பி வாழ்ந்து வந்த ஆயிரக்கணக்கான மக்கள் வேலை இழப்பார்கள். அந்த நிலை ஏற்படாதபடி சட்டத்திற்கு விதிகளை வகுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, திருமதி அனந்தநாயகியார் அவர்களின் கருத்திற்கு எதிராகவே நான் பல விவாதங்களில் பேசியிருந்தாலும், இந்தத் தடவை மட்டுமாவது நான் தெரிவிக்கவிருக்கும் கருத்து அவர்களுடைய கருத்தை ஆதரிப்பதாக இருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். அவர் சென்னை நகரத்தின் நிலைமையை நன்கு புரிந்து கொண்டிருக்கிறார். அவர் கார்ப்பரேஷன் கவுன்சிலராகவும் இருப்பதால் நகரிலுள்ள கஷ்டங்களை நன்றாக விளக்கினார். அதிலும், குடும்பப் பெண்ணின் பாரத்தை நன்றாக உணர்ந்து எடுத்துச் சொன்னார். குடும்பக் கஷ்டங்களை அதிகரிக்காத முறையில் இந்த விதிகள் வகுக்கப்படுமானால் நான் பெரிதும் மகிழ்ச்சியடைவேன். அவ்வாறு செய்ய வேண்டுமானால் குடிசைத் தொழில்களுக்கு அளிக்கும் விதிவிலக்கை பெரிய தொழில்களல்லாத எல்லாத் தொழில்களுக்கும் அளிக்க வேண்டும். 3-க்குக் குறைந்த ஹார்ஸ் பவரை உபயோகிக்கும் தொழில்கள் குடிசைத் தொழில்களாகக் கருதப்படும் என்று

தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சலவைத் தொழிலாக இருந்தாலும், வளை அறுக்கும் தொழிலாக இருந்தாலும், அச்சகத் தொழிலாக இருந்தாலும், அவைகள் 3 ஹார்ஸ் பவர்ரை உபயோகித்தாலும், அன்றாடம் பயன்படும் 1 p.m. அத்தகைய தொழில்களை குடியிருப்புப் பகுதி என்ற காரணத்தால் தடை செய்யக்கூடாது என்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அவை அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் தொழில்களாக இருப்பதுடன் மட்டுமன்றிச் சிறிய தொழில்களாகவும் இருக்கின்றன. குறிப்பாக நான் அச்சுத் தொழிலைப்பற்றிச் சொல்வேன். அச்சுத்தொழில் பெரும்பாலும் குடிசைத் தொழிலுக்கு அடுத்த கட்டத்தில் நடைபெறுகிற தொழிலாகும். சாதாரணமாக அச்சகங்களில் நாலைந்து பேர்கள் வேலை செய்வார்கள். அவர்களுக்கு அச்சகத்தில் வேலை இல்லையென்றால் பிழைப்பிற்கு வேறு வழி கிடையாது. அச்சுத்தொழில் நடத்துகிறவரும் அதை வைத்துக் கொண்டுதான் தன் குடும்பத்தை நடத்துபவராக இருக்கிறார். ஜனநாயக எண்ணம் மக்களிடையே பரவவும், மக்களிடையே அறிவு வளரவும் அச்சுத் தொழில் துணை புரிகிறது. அறிவு வளர்ச்சிக்கு அது மிக மிக அவசியமாக இருக்கிறது. ஆகவே, அச்சுத் தொழில் பரந்த அளவில் மிகவும் விரிவான அளவில் நடைபெறுமானால் அவற்றை மட்டுந்தான் பாக்டரியாக கருதலாமே தவிர, 3 ஹார்ஸ் பவர் வரையில் வைத்துக் கொண்டு அந்தத் தொழிலை செய்வார்களேயானால் அதைக் குடிசைத் தொழிலாகக் கருதுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும். அந்த முறையில் தொழில்கள் வளர இந்தச் சட்டம் துணையாகயிருக்க வேண்டும். இன்றையதினம் கார்ப்பரேஷன் விதிப்படி பல சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் தடுத்து நிறுத்தப்படுகின்றன. அவற்றிற்கெல்லாம் விதிவிலக்கு அளிக்கும் வகையில் இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட வேண்டுமென்று சொல்லிக் கொண்டு இந்தச் சட்டத்தை வரவேற்று எனது உரையை முடிக்கிறேன்.

* **THE HON. SRI M. A. MANICKAVELU** : கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு சின்ன விஷயத்திற்காக மட்டுந்தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால் சில அங்கத்தினர்கள் சுகாதாரச் சட்டத்தில் இருக்கிற சில குற்றங்குறைகளை எல்லாம் நீக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதுவேறு விஷயம். அந்தச் சட்டத்தில் உள்ளதில் எவைகளையெல்லாம் திருத்த வேண்டுமென்பது அதைத் திருத்தும்போது கவனிக்கப்படும். காட்டேஜ் இண்டஸ்ட்ரி என்று சொல்லும்போது, குடிசைகளில்தான் செய்யவேண்டுமென்று அர்த்தம் இல்லை. வேறு நல்ல பதம் இல்லாததால் அப்படிச் சொல்லப்படுகிறது. கொஞ்சம் பவர் வைத்து நடத்தும் தொழில்கள் கூட அந்த அர்த்தத்தில்தான் வரும். 92-வது பிரிவுப் பிரகாரம், அரசாங்கத்தின் நோக்கம் என்னவென்றால், அர்பன் ஏரியாக்களில், இன்டஸ்ட்ரியல் ஏரியாவில், தொழில் செய்யத் தனியாக இடமிருக்க வேண்டும், இருப்பிடம் தனியாக இருக்க வேண்டும் என்று அந்த முறையில் பிரித்து அமைக்கப்பட்டிருக்கிறது. குடியிருக்கும் இடத்தில் 20, 30 ஹார்ஸ் பவர் உள்ள ரைஸ்மில் போன்றவைகளை வைத்தால் அதனால் சுகாதாரம் கெட்டுப்போய்விடுகிறது. அது அப்படியே இருப்பதால் அடிக்கடி மனுக்கள் வருகின்றன. நாங்கள் சிறு தொழில்தான் செய்கிறோம், அதற்கு "எக்ஸெம்ஷன்" வேண்டுமென்று கேட்கிறார்கள். சிலது கொடுக்கப்பட்டிருக்கிறது, சிலது கொடுக்கப்படவும் இல்லை. ஆக, சரியான விதி முறை இல்லாததால் இதைத் திருத்தவேண்டுமென்று இம்மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இன்னொன்று, இந்த ஆக்ட் அமுலுக்கு வருவதற்கு முன்னர் ஒரு தொழில் நடந்து கொண்டிருந்தால் அது அப்படியே இருக்கலாம். ஆனால் அவைகளை "ரெஸ்ட்ரிக்ட்" செய்யலாம். தவிர, அந்தத் தொழில் கூடாதென்று சொல்லவில்லை. குடிசைத் தொழில்கள், மற்ற முன்னேற்றமடைந்த நாடுகளில் கொஞ்சம் அளவில் பவர் வைத்து நடத்துகிறார்கள். உதாரணமாக, ஜப்பான், ஸ்விட்ஸர்லண்ட் போன்றயிடங்களில், ஸ்வட்ஸர்லந்தில் ஒவ்வொரு வீட்டிலும் 1, 2 ஹார்ஸ் பவர் வைத்து குடிசைத்தொழில்கள் நடத்துகிறார்கள். ஸ்விட்ஸர்லாந்தில் கடிகாரம், வாச்கள் முதலியன செய்வது குடிசைத் தொழிலாக நடந்து வருகிறது.

30th September 1958] [Sri M. A. Manickavelu]

சின்னத் தொழில்கள் செய்ய வேண்டுமென்றால் குடியிருப்பு இடத்தில் தான் செய்யவேண்டுமே தவிர இண்டஸ்ட்ரியல ஏரியாவிறகு போக முடியாது. இச்சட்டப் பிரகாரம், அவ்வப்போது ½ ஹார்ஸ் பவர் முதல் 3 ஹார்ஸ் பவர் வரை எதை எதை கொடுக்கலாம் என்பதை அறிக்கை மூலம் தெரிவித்து கொடுக்கலாம். காட்டேஜ் இண்டஸ்ட்ரி என்றால் குடிசையில் செய்யப்படும் தொழில் என்று அர்த்தமல்ல. சின்ன ஹார்ஸ் பவரைக் கொண்டு செய்யப்படும் தொழில்களும் அதில் சேரும். சமையல் செய்யும் தொழிலை வேண்டுமானாலும் அதில் சேர்த்துக் கொள்ளலாம். ஆகவே, இந்த திருத்தத்தினால் ஒரு விபரீதமும் ஏற்பட்டு விடப்போவதில்லை என்று சொல்லிக்கொண்டு இந்த பிரேரணை சபை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Public Health (Amendment) Bill, 1958 (L.C. Bill No. 6 of 1958), as pased by the Legislative Council be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

MR. SPEAKER : Srimathi Anandanayaki has given notice of an amendment.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் அமைச்சர் அவர்கள் ½ முதல் 3 ஹார்ஸ் பவர் வரை உள்ளவற்றிற்கு விதிவிலக்கு தருகிறேன் என்று பெரிய மனதோடு சொன்னதால் நான் என் திருத்தத்தை பிரேரேபிக்க வில்லை.

Clause 2 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

"That the Madras Public Health (Amendment) Bill, 1958 (L.C. Bill No. 6 of 1958), as passed by the Legislative Council be passed."

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Public Health (Amendment) Bill, 1958 (L.C. Bill No. 6 of 1958), as passed by the Legislative Council be passed.'

* SRI A. GOVINDASAMY : தலைவர் அவர்களே, இம்மசோதாப் பிரகாரம் பிரிண்ட்டிங் பிரஸ்க்கு விதிவிலக்கு அளித்ததற்கு அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். இது, குடிசையில்தான் செய்யப்பட வேண்டுமென்ற நிலையில்லாது ஏற்கெனவே இண்டஸ்ட்ரியல் ஏரியா அல்ல என்று ஒதுக்கப்பட்டயிடங்களிலும் செய்து கொள்ள அனுமதி அளித்ததற்காக நான் அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். ஒரு சில இடங்களில் வீட்டின் ஒரு பகுதியை இண்டஸ்ட்ரியல் ஏரியாவாகவும், வேறு ஒரு பகுதியை நான்-இண்டஸ்ட்ரியல் ஏரியாவாகவும் வைத்திருக்கிறார்கள். அந்நிலைமையை முன்பு சுகாதார அமைச்சராக இருந்த கனம் ஏ. பி. ஷெட்டி அவர்களிடம் எடுத்துச் சொல்லி அது ரத்து செய்யப்பட்டது. அந்த மாதிரி எந்தெந்தயிடங்களில் இந்தத் தகராறு இருக்கிறதோ அவைகளையெல்லாம் பரிசீலித்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு அமைச்சர் அவர்களை மீண்டும் பாராட்டிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*SRI T. SAMPATH : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர்கள் பேசும்போது இந்த 92-வது பிரிவில் இருக்கக்கூடிய சில சங்கடங்களை எடுத்துச் சொன்னார்கள். அந்தப் பிரிவின் உள்பிரிவாக இது திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு பதில் அளிக்கும் வகையில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மற்ற பிரிவுகளை பொது சுகாதாரச் சட்டத்தின் மற்ற பிரிவுகளைத்திருத்தியமைக்க யோசிக்கும்போது இவைகளை எல்லாம் பற்றி யோசிக்கலாம் என்று சொன்னார்கள். இந்த சந்தர்ப்பத்தில் நான் அமைச்சர் அவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டம் 1939-ம் ஆண்டிலே இயற்றப்பட்டது. அது நிறைவேற்றப்பட்டு 19 வருடங்களாகின்றன. இந்தச் சட்டத்தை திருத்தியமைக்கவேண்டிய ஒரு அத்தியாவசியம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் 1939-ம் ஆண்டில் இருந்த ஒரு சூழ்நிலையில் இந்த ஷரத்துக்கள் எல்லாம் அந்த சட்டத்தில் அமைக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது அந்த சூழ்நிலை மாறுபட்டிருக்கிறது. அதோடு இன்னும் பல சங்கடங்களும் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே அமைச்சர் அவர்கள் சீக்கிரத்தில் இந்த பொது சுகாதாரச் சட்டத்தை "கோடிபை" செய்து, புதியதொரு சட்டத்தைக் கொண்டுவந்தால் மக்களுக்கு மிகவும் நலமாக இருக்குமென்று தெரிவித்துக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI M. K. SOMASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்தச் சட்டத்தை வரவேற்று அவர்களை பாராட்டுகிறேன். அதில் சில திருத்தங்கள் கொண்டுவந்தால் நலமாக இருக்கும். அம்மையார் அவர்கள் சொன்னபடி, மளிகைக் கடைகள் போன்ற கடைகளை "ரெஸிடென்ஷியல் ஏரியா"-வில் வைத்து நடத்த அனுமதி கொடுக்கப்பட வேண்டும். டிஸ்ட்ரிக்ட் போர்ட் ஆக்டில் இருப்பதுபோல் அவைகளுக்கு விதிவிலக்கு கொடுக்கவேண்டும். ஆகவே சிறு சிறு காட்டேஜ் இன்டஸ்ட்ரீஸ் நடக்கும் இடங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படவேண்டும். ஒரு வீட்டிற்குள்ளே ஒரு பகுதியில் என்ஜின்கள் "இன்ஸ்டால்" செய்யப்பட்டிருக்கும். இன்னொரு பகுதி "ரெஸிடென்ஷியல் ஏரியா"-வாகயிருக்கும். ஆகவே, நான் சொல்வது என்னவென்றால் அப்படி "இன்ஸ்டால்" செய்வது தனியிடத்தில் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

1–10 p.m. * THE HON. SRI M. A. MANICKAVELU : நான் முன்பே சொன்னேன். இது சாதாரணமாக ஒரு ஹார்ஸ்-பவர் இருக்கக்கூடிய மெஷின்களை எல்லாம் வைத்துக்கொள்ளலாமென்றிருந்தது. இதில் முக்கியமான கருத்து என்னவென்றால் சுகாதாரத்திற்கு பாதகம் ஏற்படக்கூடாது. அதோடு பொது ஜனங்களுக்கு தொந்தரவும் இல்லாத வகையில் குறைந்த பட்சம் எந்த விதத்தில் சௌகரியமாக இருக்க வேண்டுமோ அந்த வகையில் ஏற்பாடு செய்யப்படும். யாராவது இதற்கு விரோதமாக நடந்து கொண்டால் அதை அபென்ஸிவ் என்று கருதி அதை நிறுத்தப்படும். மற்றபடி சுகாதாரத்திற்கு பாதகம் இல்லாத முறையில் பொது ஜனங்களுக்கு தொந்தரவு இல்லாத முறையில் இருக்கக்கூடிய எல்லா தொழில்களும் அனுமதிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Public Health (Amendment) Bill, 1958 (L.C. Bill No. 6 of 1958), as pased by the Legislative Council be passed."

The motion was put and carried and the Bill was passed.

MR. SPEAKER : I adjourn the House to meet again at 3-30 p.m.